மாநகராட்சி மன்றம்

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

21.12.2016 - மலர் 13, இதழ் 43

## இனிய நத்தார் வாழ்த்துக்கள்





## உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு விற்பனையாகின்றன?



## வெள்ளை நிறமாகும் வீதிக் கடவைகள்



## மீண்டும் முயலை ஆமை வென்றது

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைமங்களுக்குள் மறைந்த அபூர்வ விலங்கினம்



அமெரிக்காவின் வொஷிங்டனில் அமைந்துள்ள ஸ்மித்சோனியன் அரும்பொருள் காட்சியகத்தில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள விலங்குகளின் புதைமங்கள் மற்றும் எலும்புத் துண்டுகளுக்கிடையே இதுவரை அறியப்படாத புதியவகை விலங்கொன்று இனங்காணப்பட்டுள்ளது. வருடங்களாக இப்புதைமங்களுக்கிடையே ஒளிந்திருந்த இந்த அபூர்வ விலங்கினம் வட்ட வடிவமான தாடை எலும்புடன் கூடிய வாயையும் தலையில் இரு குறடு போன்ற அமைப்பையும் கொண்டது.

இந்த விலங்கின் புதைமங்கள் 1912 ஆம் ஆண்டு கனடாவின் 'பர்ஜஸ் ஷெல்' என்ற அகழ்வாராய்ச்சி பிரதேசத்திலிருந்து அகழ்தெடுக்கப்பட்டதாகும். அக்காலத்தில் இவ் விலங்கின் எலும்புத் துண்டுகளை நன்றாகப் பரீட்சித்துப் பார்த்த விஞ்ஞானிகள் அது 505 மில்லியன் வருடங்கள் பழமை வாய்ந்த விலங்கினமென தீர்மானித்தனர்.

1990 தசாப்தத்திலும் இதேபோன்ற மென்மேலும் சில புதைம ஆதாரங்களும் எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன. முன்னதாக இந்த எலும்புகளும் புதைமங்களும் லொடியன் அல்லது ஜெலிஃபிஷ் போன்ற வகையைச் சேர்ந்தன என கூறிவந்தபொழுதிலும் இப்பொழுது அவற்றை பரீட்சித்துப் பார்த்த விஞ்ஞானிகள் இந்த விலங்கு முழுமையாக வேறொரு வகையைச் சேர்ந்தது என்கின்றனர்.

எனவே, இந்த வித்தியாசமான விலங்கினத்திற்கு இப்பொழுது 'ஹர்டியா விக்டோரியா' என பெயர் வைத்துள்ளனர். பிரிவடைந்த உடலமைப்பைக் கொண்ட இந்த விலங்கினத்தின் மேல் மண்டை ஓட்டிலிருந்து கீழ் வரை விரிவடைந்து செல்கின்றது. ''இவ்விலங்கினம் எந்தவொரு விலங்கினத்தையும் போன்றதல்ல, மிகவும் வித்தியாசமானவை. பெரும்பாலான விலங்குகளுக்கு இத்தகைய எலும்புகூடுகள் அதன் உடலின் மென்மையான



பகுதியை பாதுகாக்கவே அமைந்திருக்கும். ஆனால், இந்த விலங்கிற்கோ அவ்வாறில்லை. உடலின் மென்மையான பகுதிகளுக்கு வெளியேதான் இந்த எலும்புக் கூடு அமைந்துள்ளன'' என எலிசன் டேலி கூறுகின்றார். இது குறித்த தகவலை வெளிக்கொணர இவர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

அப் பெண்மணி சுவீடனின் உப்சாலா பல்கலைக் கழகத்தில் கலாநிதி பட்டப் படிப்பிற்காக மூன்று வருடங்களாக தொடர்ந்து ஆய்வுகளில் ஈடுபட்டு வந்தார். மேலும் கனடா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆய்வாளர்களும் இக்குழுவில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

**- விபாகர்**

# நத்தார் அலங்காரம்

நத்தார் காலங்களில் உங்கள் இல்லங்களை நீங்களே தயாரித்த அலங்காரங்களைக் கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள். செய்முறை வருமாறு:

**தேவையான பொருட்கள்:**

- ★ டிஷு கடதாசி ரோல்கள் (உருளை)
- ★ பச்சை நிறச் சாயம்
- ★ சிகப்பு நிற முத்துக்கள்
- ★ பசை

**செய்முறை:**

1



கடதாசி ரோல்களின் வெளிப்புறத்தில் பச்சை நிற சாயத்தை பூசுங்கள். உலர விடுங்கள்.

2



இப்போது அந்த கடதாசி ரோல்களை சிறிய (வட்ட) துண்டுகளாக வெட்டுங்கள். ஒவ்வொரு துண்டும் சம அளவில் மலர் இதழ்களின் வடிவில் இருத்தல் வேண்டும்.

3




வெட்டப்பட்ட (வட்ட) ஐந்து மலர் இதழ்களை எடுங்கள். ஒன்றுடன் ஒன்றை ஒட்டி மலர் வடிவில் ஒட்டிக் கொள்ளுங்கள்.

4



அவ்வாறான 18 மலர்களை செய்து கொள்ளுங்கள்.

5



இரண்டு மலர்களை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் ஒரு மலரின் இரண்டு இதழ்களின் இடையே மற்றைய மலரின் ஒரு இதழை நுழைத்து ஒட்டுங்கள். இவ்வாறு ஒன்பது மலர்களை அடுத்தடுத்து தொடுத்து வளைய வடிவில் அமைத்துக்கொள்ளுங்கள்.

6

மிகுதியாக உள்ள ஒன்பது மலர்களையும் அவ்வாறே ஒட்டி மற்றுமொரு வலையத்தை அமையுங்கள்.

7

இப்போது இந்த மலர்களில் பச்சை நிறச் சாயம் பூசப்படாத பகுதிகளில் பச்சை நிறத்தைப் பூசவும்.

8



ஒவ்வொரு மலரின் நடுவிலும் மும்மூன்று சிகப்பு முத்துக்களை ஒட்டுங்கள்.

9



அடுத்ததாக ஒரு மலர் வளையத்தின் நடுவே மற்றைய வளைத்தைப் பொருத்தி ஒட்டிக் கொள்ளுங்கள். இதோ, அருமையான நத்தார் அலங்காரம் தயார்.

**ஆலோசனை:**

இதற்கென 'டிஷு' தாள் ரோல் (உருளை) இல்லையென்றால் கவலைப்படாதீர்கள். அதற்குப் பதிலாக 'கார்ட்போர்ட்' கொண்டு உருளைகளை தயார்படுத்திக்கொள்ளுங்கள். இதில் மலர்களுக்கென சிகப்பு நிறத்தையும் சிகப்பு முத்துக்களுக்குப் பதிலாக வெள்ளை முத்துக்களையும் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சள் நிற வீதிக்கடவைகள் வெள்ளை நிறமாக மாற்றப்படுகின்றன





இலங்கையிலுள்ள மஞ்சள் நிற வீதிக் கடவைகள் இனி வெள்ளை நிறமாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அடுத்த வருடம் தொடக்கம் இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வெளிநாடுகளிலும் மஞ்சள் நிறக் கடவையே பயன்பாட்டில் உள்ள நிலையில் இலங்கையில் ஏன் இது வெள்ளை நிறமாக்கப்படுகின்றது என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அதாவது, வெளிநாடுகளில் மஞ்சள் நிறத்தில் இக்கடவைகள் அமைக்கப்பட்டுள்ளமைக்கு காரணம் உள்ளது. அங்கு குளிர்காலங்களின்போது எல்லா இடங்களிலும் பனிப் பொழிவு இடம்பெறுவதுண்டு. இதனால், பனியானது, எல்லாவற்றையும் மறைத்துவிடுவதுண்டு. குறிப்பாக, வீதியிலுள்ள கடவைகளும் வெள்ளை நிறமாக இருப்பின் வெள்ளை நிறப் பனியும் அதன்மீது படிந்துவிட்டால் வாகன ஓட்டிகளுக்கோ, பாதசாரிகளுக்கோ இந்தக் கடவையின் கோடுகள் கண்களுக்குப் புலப்படாத வகையில் அமைந்துவிடும்.

இதனால்தான், குளிர் நாடுகளில் இவ்வாறு வெள்ளைக் கோடுகளுக்குப் பதிலாக மஞ்சள் கோடுகள் வீதிகளுக்கு இடப்படுகின்றன. ஆனால், இலங்கை போன்ற நாடுகளில் அத்தகைய நிலை இல்லை. எனவே, கருமை நிறத் தார் ரோட்டில் வெண்மை நிறக் கோடுகளை அமைத்தால் பகலில் மட்டுமன்றி, இரவிலும்கூட அது தெளிவாகத் தெரியும். இது வாகன ஓட்டுனர்களுக்கும், பாதசாரிகளுக்கும் பாதுகாப்பான ஒரு வழிமுறையாக அமையும். இவற்றைக் கவனத்தில் கொண்டே மஞ்சள் நிறக் கடவைகள் வெள்ளை நிறத்தில் மாற்றி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய வீதி கடவைகளில் வேகத்தடைகளை அமைத்தால் (Speed breaker) விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என்பதே பலரது அபிப்பிராயமாகவும் உள்ளது.

விஜய்

அடுத்த இதழில் இலவச


கால அட்டவணை



பெற்றுக் கொள்ளத் தவறாதீர்கள்...

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652



ஆமை-முயல் கதையை நாம் கேள்விப்பட்டுள்ளோம். அவசரக்காரர்களால் வெற்றியீட்ட முடியாது. திட்டமிட்டு நிதானமாக செல்கின்ற பயணத்திலேயே வெற்றியீட்ட முடியும் என்பதை உணர்த்தும் கதையே ஆமை-முயல் கதையாகும்.


கதையில் மட்டுமல்ல நிஜமாகவும் இவ்வாறான ஒரு



# முயல் - ஆமை ஓட்டத்தில் மீண்டும் ஆமை வென்றது

சம்பவம் நடந்துவிட்டது. அதாவது, கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் ஆமைக்கும் முயலுக்குமான ஓட்டப்போட்டியொன்று நடைபெற்றதில் அதிலும் கூட ஆமைதான் வெற்றியீட்டியது. இந்தப் போட்டி ஐரோப்பிய நாடொன்றிலேயே நடந்துள்ளது.

போட்டியின் ஆரம்பத்தில் முயல் வேகமாக ஓடியபோதிலும் அங்கு பெருமளவில் பார்வையாளர்கள் இருந்தமையாலும் அவர்களின் கரகோஷம், கூச்சல் சத்தம் ஆகியவற்றைக் கேட்டும் மிரண்டுபோன முயலார் வெற்றிக் கம்பத்திற்கு சற்று தூரத்திலேயே ஓட்டத்தை நிறுத்திவிட்டு நின்ற நிலையிலேயே அப்படியே இருந்துவிட்டது. ஆனால், ஆமையோ ஒன்றையும் பொருட்படுத்தாது தன்பாட்டில் வெற்றிக் கம்பத்தை தொட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீக்ரெட் சிக்ஸ் இரகசிய குழு...

14



ஜே.விபாகர்

பிருந்தா தான் கொண்டுவந்த பையினுள் இருந்து, முன்தினமிரவு மொன்டி கவ்வி எடுத்த சால்வைத்துண்டினை வெளியே எடுத்தாள். மொன்டி தயாராயிருந்தது.

“மொன்டி... நல்லா மோப்பம் பிடி... நீ ஆளைக் காட்டினால் ஹரிஷை கண்டுபிடிக்கலாம்”

மொன்டி நன்கு மோப்பம் பிடித்துவிட்டு மெல்ல நகர்ந்தது. மூவரும் அதன் பின்னால் மெல்ல நடந்தனர். மொன்டி மீண்டும் ஓடி வந்து சால்வையை மோப்பம் பிடித்துவிட்டு, பின் மூக்கை மேலே உயர்த்தி காற்றில் அங்கும் இங்கும் அசைந்தது. திடீரென ஒரு திசையில் ஓடியது. மூவரும் பின்னால் ஓடினர். மொன்டி பல வீடுகளை தாண்டி ஓடியது. ஆங்காங்கே நின்று மறுபடி மோப்பம் பிடித்தது. பல நிமிடங்கள் கழிந்தன. இறுதியில் நேராக ஒரு வீட்டினுள் நுழைந்தது. அது மாரிமுத்து ஐயாவின் வீடு. வீட்டினுள் நுழைந்த மொன்டி நேராக ஒரு மரப் பெட்டியினருகே சென்று அதனுள் இருந்து அந்த கறுப்பு சால்வையை கவ்வி எடுத்தது.

“ஏய்...! என்ன செய்கிறாய்!? வெளியே போ...!” மாரிமுத்து ஐயாவின் மகன் மொன்டியை விரட்டினான்.

மொன்டி அவனை பார்த்துக் குரைத்தது.

“மொன்டி! இங்கே வா...!”

அனிதா அழைத்தாள். மாரிமுத்துவின் மகன் அவர்கள் மூவரையும், மொன்டியையும், அவர்களுடன் வந்திருந்த பொலிஸ்காரரையும் மாறி மாறிப் பார்த்தான். பின்னர் மெதுவாக,

“நான் எல்லா உண்மையையும்சொல்லுறேன். என்னை ஒன்றும் செய்யாதீங்க...” என்றான்.

“அந்த சுரங்கம் வழியாக எங்கே போனீர்கள்?”

“அந்த உயரமான ஆள் யார்?”

“மேலே என்ன நடக்கிறது?”

“ஹரிஷ் எங்கே...?”

அருண், அனிதா, பிருந்தா மூவரும் கேள்விகளை அடுக்கிக்கொண்டே சென்றனர். மாரிமுத்து ஐயாவின் மகன் அவர்களை பார்த்து அமைதியாக ‘உட்காருங்கள்’ என்றான். அவர்கள் கொஞ்சம் சந்தேகத்துடன் அமர்ந்தனர்.

அவன் தன் பையிலிருந்து ஒரு செய்தித்தாள் துண்டினை வெளியே எடுத்தான்.

“இதை வாசியுங்கள்...!”

அருண் கையில் வாங்கிப் படித்தான்.

“காணவில்லை... லோரா என்கிற எட்டு வயது சிறுமியை ஐந்து நாட்களாக காணவில்லை. காணாமல் போகும்போது பச்சை நிற நீண்ட உடை அணிந்திருந்தாள். வெள்ளை நிறம், சுருண்ட தலைமயிர், நீல நிற கண்கள். கடைசியாக வேலூர் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தாள்” அருகில் ஒரு சிறுமியின் படம் இருந்தது. பொலிஸ் கான்ஸ்டபிள் அதை வாங்கிப் பார்த்தார்.

“இதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?”

“சில நாட்களுக்கு முன் என்னிடம் இரண்டுபேர் பேசினார்கள். ஒரு உயரமான நபர். இன்னொருவர் குள்ளமானவர். மிகவும் குள்ளம். ஒரு மூன்று, அடி இருப்பார்”

“என்ன பேசினார்கள்...!?” அவன் எச்சிலை விழுங்கிவிட்டு மறுபடி பேசினான்.

“நான் அப்பாவுக்கு தெரியாமல் சில நேரம் வெளியாட்களை அந்த மாளிகை வீட்டில் தங்க வைப்பேன். அவர்கள் பணம் தருவார்கள். அப்படி தங்களுக்கும் சில நாட்கள் கொடுக்க முடியுமா என்று...

தொடர்கதை...

கேட்டார்கள்”

“ம்... பிறகு...!?”

“நான் சம்மதித்தேன். அப்போது அவர்களிருவரும் ஒருநாள் இரவு இரகசியமாக தங்க வரும்போது அவர்களுடன் ஒரு சிறுமியும் இருந்தாள். எனக்கு கொஞ்சம் சந்தேகமாக இருந்தது; இருந்தாலும் நான் எதுவும் கேட்கவில்லை. இன்று காலைதான் பத்திரிகையில் இந்த விளம்பரத்தைப் பார்த்தேன். இந்த சிறுமிதான் அது!”

“ஹரிஷ்...!?”

(தொடரும்)

# உயிர்களை நேசி



ஓர் ஊரில் பால் வியாபாரி ஒருவர் பெருந்தொகையான பசுக்களை வளர்த்து வந்தார். அவர் அப்பசுக்கள் மூலம் கிடைத்த பாலினை விற்று சிறப்பாக வாழ்ந்தார். பால் வியாபாரியின் இரு மகன்களும் அங்குள்ள பசுக்களை மிகவும் அன்பாகப் பராமரித்து வந்தனர். இவ்வாறே, நாட்கள் பல ஓடின.

பால் வியாபாரியின் பண்ணையில் இருந்த பசுக்களில் சில பசுக்களுக்கு வயதாகிவிட்டதால் அவை கடும் நோய் வாய்ப்பட்டன. இதனை அறிந்த பால் வியாபாரி பல மிருக மருத்துவர்களை நாடியும் பயனற்றுப் போனது. அதன்பின்னர் வேறு வழியில்லை என தீர்மானித்த வியாபாரி, தன் மனைவியை அழைத்து, “நம் பண்ணையில் உள்ள சில மாடுகளுக்கு வயதாகிவிட்டது, அவைகளால் ஒரு பிரயோசனமும் இல்லை. அதனால், இறைச்சிக் கடைக்கு விற்றால் அதிக பணம் கிடைக்கும்” என்றான். அவளும் மறுவார்த்தை கூறாது சம்மதித்தாள். இவர்களுடைய உரையாடலைக் கேட்ட இரு மகன்களும் கவலையுற்றனர்.

அவர்கள் இருவரும் தந்தையிடம் சென்று, ஒரே குரலில், “அப்பா! வயதாகிவிட்டால் நாம் எதற்குமே பயன்படமாட்டோமா?” என்று கேட்டனர். “அதிலென்ன சந்தேகம்! நிற்கவோ, நடக்கவோ முடியாது கஷ்டமாகத் தானே இருக்கும்” என்றார் அப்பா. இவற்றை மௌனமாக கேட்டுக்கொண்டிருந்த மகன்கள், “சரி! அப்பா அந்த நேரத்தில் எம்மை யார் பார்த்துக்கொள்ள வேண்டும்?” என்று கேட்டனர்.

அதற்கு அப்பா, “நம்முடைய வளர்ச்சிக்கு காரணமானவர்களை நாம் தான் காப்பாற்ற வேண்டும். உதாரணத்திற்கு பெற்றவர்களை பிள்ளைகள் காப்பாற்ற வேண்டும்” என பெருமிதமாகப் பதிலளித்தார். இதனைக் கேட்டதும் மகன்கள் இருவரும்... “அப்போது நம்முடைய மாடுகளுக்கு வயதாகிவிட்டது என விலைக்கு விற்கலாமா? இதுவரை காலமும் நம்முடைய வளர்ச்சிக்காக அவைகளைப் பயன்படுத்திவிட்டு, இப்போது அதன் வயதைக் காரணம் காட்டிக் கொல்லத் துணிந்து விட்டீர்களே, இது நியாயமா அப்பா?” எனக் கேட்டனர்.

இதனைக் கேட்டதும் பால் வியாபாரிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. தன் இழிவான சிந்தனையை எண்ணி வருந்தினார். அதன் பின்னர் இரு மகன்களிடமும் மன்னிப்புக் கேட்டு விட்டு “இனி இப்படியான ஓர் எண்ணம் எனக்குத் தோன்றாது” என வாக்குறுதி அளித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுபிக் பெருங்கடலிலுள்ள ஈஸ்டர் தீவில் பாரிய கற்சிலைகளின் தலையில் சிவப்பு நிறத்திலான தொப்பிகளைக் காணலாம். இந்தக் கற்தொப்பிகள், கற்சிலைகளை அமைக்கும்போது உருவாக்கப்பட்டவை அல்ல. இந்த தொப்பிகள் மற்றும் கற்சிலைகள் தொடர்பான ஆய்வினை பிரித்தானிய தொல்பொருள் ஆய்வாளர்கள் அண்மையில் மேற்கொண்டனர். இதன்படி, பழைய மர்மங்களின் விபரங்கள் தற்போது வெளிப்பட்டுள்ளது. அந்த மர்மங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

# ஈஸ்டர் தீவின் சிலைகளுக்
# தொப்பி அணிவித்



## கற்குழி



இந்த தீவிலுள்ள சிறு பாதையை ஆய்வாளர்கள் ஆராய்ந்தபோது, பழைய எரிமலை ஒன்றை அங்குள்ள கற்குழி ஒன்றிலேயே கண்டுபிடித்தனர். இச்சிலைகளுக்கு அணிவிக்கப்பட்டுள்ள தொப்பி இந்தக் கற்குழியிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த தொப்பிகள் மரக்குற்றிகளின் உதவியுடனேயே சிலைகள் இருக்கும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தொப்பி

பல தொன்கள் நிறையுடைய இந்த கற்தொப்பிகளை ஆய்வாளர்கள் பரீட்சித்தபோது, அவை இரும்புடன் கூடிய மண்ணாலும் எரிமலை நெருப்பு குழம்பாலும் செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. இத்தொப்பிகளை 500-750 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கரையோரங்களில் நடைபெற்ற வைபவங்களின்போது பொலனிசியர்களே இந்த சிலைகளுக்கு அணிவித்துள்ளனர். ஆனால், இச்சிலைகளுக்கு எவ்வாறு தொப்பிகளை அணிவித்தனர் என்பது தெளிவற்றே உள்ளது.



1722
யாக்கோப் ரொகேவீன்

1722 ஆம் ஆண்டு ஒல்லாந்த நாடுகாண் பயணியான யாக்கோப் ரொகேவீன் தலைமையிலான குழு ஒன்று தென்கிழக்குப் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள சிறிய தீவில் தரை இறங்கியது. அப்போது கரைக்கு அருகில் சிறு மேடைகளில் அமைக்கப்பட்டிருந்த சிலைகளைக் கண்டு இக்குழுவினர் ஆச்சரியமடைந்தனர். மனித நடமாட்டமே இல்லாத இத்தீவில் எவ்வாறு இவ்வாறான பாரிய கற்சிலைகள் செய்யப்பட்டுள்ளன? என்பதே அவர்களது ஆச்சரியத்திற்கான காரணமாகும். இத்தீவிற்கு முதன்முதலாக வந்த ஐரோப்பிய இனத்தவரான ரொகெவீன் என்பவரே 'ஈஸ்டர் ஐலேன்ட்' எனும் பெயரை இத்தீவிற்கு சூட்டினார். இத்தீவு தற்போது மர்மங்கள் நிறைந்த 'மொய்' என்ற கற்சிலைகளால் உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. இது 'உலக மரபுரிமை' என யுனெஸ்கோ நிறுவனத்தால் இணங்காணப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது.





## வேற்றுக்கிரகவாசிகள்



20 ஆம் நூற்றாண்டில் இத்தீவுக்கு வந்த பண்டைய மக்கள் பொலினிசியாவிலிருந்து வந்தவர்கள் அல்ல என்றும் அவர்கள் அமெரிக்காவிலிருந்து வந்தனர் என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதேவேளை, சுவிற்சலாந்தைச் சேர்ந்த எரிக் லொன் டெனியெக் என்பவர் எழுதிய 'செலியட்ஸ் ஒப் கோடிஸ்' என்ற நாவலுக்கு அமைய இந்தச் சிலைகள் இங்கு அநாதரவாக வாழ்ந்த வேற்றுக் கிரகவாசிகள் சிலரால் அமைக்கப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் பூமியில் இருந்து தப்பித்துச் சென்றதாகவும் அதில் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரம் தொடர்பான உண்மைகள்

ஈஸ்டர் தீவில் முற்காலத்தில் பனை மரங்கள் அதிகளவில் இருந்ததாக நம்பப்படுகிறது. இப்பனை மரங்கள் 60 அடி வரை உயரமானதெனக் கூறப்படுகின்றது. இத்தீவின் ஆதிவாசிகள் இம்மரங்களைப் படகுகள் செய்வதற்கும் சிலைகளை நேராக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு இம்மரங்கள் தரிக்கப்பட்டதால் இன்று பனை மரங்களை இத்தீவுகளில் காணமுடியாதுள்ளது.

### மர்மமான தீவு

ஈஸ்டர் தீவு தொடர்பாக, நடத்தப்பட்ட ஆய்வுகளில் இத்தீவின் ஆரம்பக் குடிகள் யார்? இச்சிலைகளை வடிவமைத்தது யார்? இதன் பொருட்டு அவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்பம் யாது? இச்சிலைகளை வடிவமைத்தவர்களுக்கு என்ன நடந்தது, என்பது பற்றிய வினாக்களுக்கு விடையளிக்க முடியாதுள்ளது. தற்போது பொலினிசிய மொழியைப் பேசும் இத்தீவுவாசிகள் 'ரபாநுய்' என இத்தீவை அழைக்கின்றனர். இதன் அர்த்தம் பெரிய தீவு என்பதாகும்.






# ...து யார்?



## 3 அடி தொடக்கம் 66 அடி வரை
## பாரம் தொன் 80 வரை



### தொல்பொருள் ரகசியம்

தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடமாகவும் ஈஸ்டர் தீவு மிகவும் பிரசித்தி பெற்றுத் திகழ்கின்றது. இங்கு மறைந்த ஒரு நாகரிகத்தின் சிறப்பை வெளிப்படுத்துவதற்கு எஞ்சியிருப்பது இந்தக் கற்சிலைகள் மாத்திரமேயாகும். இவ்வாறான 600 சிலைகள் இங்கு காணப்படுகின்றன. அவை 3 அடி தொடக்கம் 66 அடி வரை உயரமானவை, பெரிய சிலை 80 தொன் வரையான நிறை கொண்டதாகும். இந்த சிலைகளை ஆராய்ந்த ஆய்வுக் குழுவினர் இவை 'ரானோ ராராக்கு' எனும் எரிமலையின் கற்களிலிருந்து செய்யப்பட்டதாகக் கூறுகின்றனர். இந்த எரிமலையிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் அரைகுறையாக நிர்மாணிக்கப்பட்ட சிலைகளும் காணப்படுகின்றன. இத்தீவைச் சுற்றிலும் 'அஹு' எனப்படும் விசேடமாக அமைக்கப்பட்ட மேடைமீது இச்சிலைகள் வைக்கப்பட்டுள்ள. 'அஹு' என்பது பண்டைய தீவு மக்கள் பலி செலுத்திய இடமென வரலாற்று ஆய்வாளர்கள் கூறிப்பிடுகின்றனர். மேலும் இச்சிலைகள் பண்டைய தீவு மக்களால் தமது முன்னோரின் நினைவாக அமைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. எனினும் இந்த முன்னோர் பற்றிய எவ்வித தகவல்களும் இதுவரை அறியப் படவில்லை.

### அதிசய குகை

இத்தீவில் பெறுமதிமிக்க பல அதிசயக் குகைகள் காணப்படுகின்றன. இத்தீவில் வாழும் மக்களின் முன்னோர்களினது எலும்புக்கூடு, கல் மற்றும் மரச்செதுக்கல்கள் என்பன இங்கு காணப்படும் குகைகளில் இருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இக்குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட செதுக்கல்களில் 'ரொன்கோ ரொன்கோ' எனப்படும் சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பலகைத் தூண்கள் சிறப்பிடம் பெறுகின்றன.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்


பெயர்: ................................................

01) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.


★ *1 ஆம், 2 ஆம் வினாக்களில் அடுத்து வரவுள்ள உருவை தெரிவுசெய்க.*

01. 


1. 2. 3. 4.

02. 


1. 2. 3. 4.

03. 
இந்த எண் சட்டம் காட்டும் எண் யாது?

1. 5303 2. 533 3. 5313

04. 
இவ்வுருவில் காட்டக்கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?


1. 4 2. 1 3. 2

05. 
இக்கடிகாரம் 15 நிமிடங்கள் முந்தி ஓடுகின்றது எனின், சரியான நேரம் யாது?

1. 3:15 2. 3:30 3. 2:45

06. 5396 இந்த எண்ணில் இலக்கம் 3 இன் பெறுமானம் யாது?

1. 30 2. 300 3. 3000

07. 
1cm இடைவெளியில் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன. அதில் காட்டப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

1. $4cm^2$ 2. 2cm 3. $2cm^2$

08. 
இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

1. $\frac{1}{8}$ 2. $\frac{1}{4}$ 3. $\frac{1}{6}$


09. 
இவ்வுருவின் முகங்களின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 5 3. 4

10. 
அருகில் உள்ள உருவில் காணப்படும் செங்கற்களின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 6 3. 4




11. 
உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?

1. நீள்வட்டம் 2. செவ்வகம் 3. வட்டம்

12. 3000 + ☐ + 30 + 7 = 3437 வெற்றுக்கூட்டிற்குள் வர வேண்டிய எண்ணை எழுதுக.

1. 100 2. 400 3. 200

13. $\frac{1}{3}$ இன் சமவலுப் பின்னம் யாது?

1. $\frac{1}{6}$ 2. $\frac{3}{6}$ 3. $\frac{2}{6}$

14. 8 மனிதர்கள் ஓரிடத்தில் இருந்து நடக்க ஆரம்பித்து 4 மணித்தியாலங்களில் 24km தூரம் நடந்து முடித்தனர். 2 மணித்தியாலங்களில் ஒருவர் நடந்து சென்ற தூரம் யாது?

1. 6km 2. 8km 3. 12km

15. 10 முட்டைகள் அவிய 10 நிமிடங்கள் எடுத்தன எனின், அதில் 2 முட்டைகள் அவிய எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?

1. 10 நிமிடங்கள் 2. 20 நிமிடங்கள்
3. 2 நிமிடங்கள்

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## தமிழ்

(டிசம்பர் 14 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*01)* *1. பூரண சந்திரன்* *2. ஆச்சரியம்* *3. அமாவாசை*
*4. குடங்கள்* *5. சந்திரன் தேய்ந்து வளர்வதைப் பற்றி*
*6. கண்களில்* *7. சந்திரன், நிலா*

*02)* *1. மாமா வருகிறார்* *2. நான் பாகற்காய் வாங்குகிறேன்*
*3. நீங்கள் எங்கே போகிறீர்கள்?*

*03)* *1. வரைந்தாள்* *2. பெருக்கு* *3. கண்டோம்*

*04)* *1. ✓* *2. ✕* *3. ✕* *4. ✓*

*05)* *1. குடுகுடு* *2. வழவழ* *3. படபட*
*4. மளமள* *5. பளபள*

*06)* *1. நிலம்* *2. பெண்* *3. விநோதம்*
*4. சோறு* *5. சிநேகம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமதான தூதரின் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் பண்டிகை



நத்தார் பண்டிகை என்பது கிறிஸ்தவர்கள் தமது இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் திருநாளாகும். மதங்கள், இனங்கள் அனைத்தையும் தாண்டி பல கலை நிகழ்வுகளுடன் உலக மக்களால் இந்நிகழ்வு மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

## வரலாற்று நிகழ்வு

இற்றைக்கு ஏறக்குறைய 2016 வருடங்களுக்கு முன்னர் மத்திய கிழக்கில் வாழ்ந்த யோசேப்பு என்பவர் தனது மனைவியான நிறைமாதக் கர்ப்பிணியான மரியாளை அழைத்துக்கொண்டு யூதேயா நாட்டில் உள்ள பெத்லஹேம் நகருக்கு போகவேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வேளை, அந்நாட்டில் குடிசன மதிப்பெழுதப்பட வேண்டும் என அரச கட்டளை விதிக்கப்பட்டிருந்தபடியால் அவர்களுக்கு சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை, அப்போதுதான் பிரசவ வலியால் மரியாள் துடித்தபோது, அங்கிருந்த மாட்டுத் தொழுவத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்தது. இவ்வேளையில் உலகைக் காத்தருளும் திருக்குமாரனைப் பெற்று துணிகளால் சுற்றி வைக்கோலில் கிடத்தியதாக வேதாகமம் கூறுகின்றது.

## நத்தார் பண்டிகையின் சிறப்பம்சங்கள்

நத்தார் பண்டிகையை 'கிறிஸ்மஸ் பண்டிகை' என்றும் கூறுவர். இப்பண்டிகையின் போது சில அடையாளங்களை கிறிஸ்தவர்கள் மேற்கொள்ளவார்கள். அவையாவன

## பாலன் குடில்



நத்தாரின் போது, பாலன் குடில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அருட் திரு. பிரான்சிஸ் எனும் குருவானவரே, உலகின் முதலாவது பாலன் குடியை அமைத்தார். இயேசு ஏழ்மையுடன் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தபோது பெற்றோர், வானதூதர், இடையர்கள் மூலம், சில ஆடு மாடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதே பாலன் குடில், எனப்படுகின்றது. தேவதூதர்களே, இயேசுவின் பிறப்பினை முதன் முதலாக உலகிற்கு அறிவித்தமையாலும் இவர்களும் பாலன் குடிலில் முக்கிய அங்கம் வகிக்கின்றனர். கிறிஸ்துவின் பிறப்பின்போது, வானில் வால் நட்சத்திரம் தோன்றியதால் தேவாலயங்களிலும் வீடுகளிலும் அதன் நினைவாக அலங்காரத்தில் வால் நட்சத்திரம் இடம்பெறும்.

## நத்தார் மரம்

இவை தவிர அழகிய கைவண்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட நத்தார் மரங்கள். அத்தோடு, நத்தார் மெழுகுவர்த்திகள், உணவுப் பொருட்கள் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

## நத்தார் தாத்தா

நத்தார் பண்டிகை என்றாலே அனைத்து சிறுவர்களுக்கும் நத்தார் தாத்தாவே முதலில் நினைவிற்கு வருகின்றார். இவரை 'சென்டா' (Santa) என்றும் அழைப்பர். இவர் சிவப்பு மற்றும் வெள்ளை நிற உடையில் வயோதிப தோற்றத்தில் நத்தார் கொண்டாட்டங்களின்போது, சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்குவார்.

துருக்கி நாட்டைச் சேர்ந்த புனித நிக்கலஸ் என்பவர் தன் வாழ்நாள் முழுவதும் தனது சொத்துக்கள் முடியும் வரை ஏழைக் குழந்தைகளுக்கு நத்தார் தினத்தன்று பரிசில்கள் வழங்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இவர் கி.பி 341 டிசெம்பர் மாதம் இவ்வுலகை விட்டு நீங்கினார். அதனால் அவர் நினைவாக இவ்வழக்கத்தை இன்று வரை நத்தார் தினத்தன்று உலக மக்களால் கைக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அர்த்தமுள்ள கிறிஸ்மஸ்

உலகை இரட்சிப்பதற்காக இம்மண்ணுலகில் ஏழ்மையில் பிறந்து, மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்து முன்னுதாரணமாய் வாழ்ந்த இயேசுவின் வாழ்வு இவ்வுலக மக்களின் மீட்பிற்கு அடித்தளமாக அமைகின்றன என்பதே கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.

எனவே, இயேசுவின் பிறப்பானது, வெறும் கொண்டாட்டம் நிறைந்த நாள் அல்ல என்பதோடு, உலக இரட்சிப்பிற்கான ஆன்மீக மாற்றத்தின் ஆரம்ப நாளாக எண்ணி அர்த்தமுள்ள ஒரு பெருநாளாகவே கொண்டாடப்பட வேண்டும் என்பதே கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பாகும். ஏழைகள், நோயாளிகள், அநாதைகள் என யாருக்கெல்லாம் அன்பும் அரவணைப்பும் தேவையோ அவர்களை நத்தார் தினத்தில் தேடிச் சென்று அன்பு செலுத்தி அரவணைப்பதே உண்மையான நத்தார் தினம் ஆகும். இயேசு கிறிஸ்துவின் தோற்றமும் நல்வாழ்வும் உலகிற்கு ஒளியாய் கிறிஸ்தவர்களின் வாழ்விற்கும் மனித சமுதாயத்திற்கும் மிகச் சிறந்த உதாரணமாகும். இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட இயேசுவின் வரவை கொண்டாடவுள்ள அனைத்து நல் உள்ளங்களுக்கும் நத்தார் தின நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் சாரணர் உலகம்

# சாரணர் முன்னேற்ற அட்டையின் முக்கியத்துவம்




1. சாரணர் அணியில் சேரும் ஒவ்வொரு சாரணருக்கும் சாரணர் முன்னேற்ற அட்டை முக்கியமானது.

2. சாரணர் அணித்தலைவரின் மேற்பார்வையில் நடைபெறும் அனைத்து பயிற்சிகளின் முடிவில் மறக்காமல் தங்களது சாரணர் முன்னேற்ற அட்டையில் பயிற்சி விபரங்களையும் அணித்தலைவரின் கையெழுத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தோடு, சாரணர் அணித்தலைவர்கள் சபையில் கூட்டத்தின்போது, அணிகளுக்கு பொறுப்பான அணித்தலைவனால் தன் அணியிலுள்ள சாரணர்களுடைய அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா...? என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

3. அணித்தலைவனால் உறுதி செய்யப்பட்ட தகவல்களை சாரணர் ஆசிரியர் பரீட்சித்து உறுதிப்படுத்த வேண்டும்.

4. சாரணர் முன்னேற்ற அட்டைகளை இலங்கை சாரணர் சங்கத்தின் தேசிய தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.



5. மாவட்ட ஆணையாளர் விருது வரையிலான பயிற்சிகளை பெறும் வரையில் இவ்வட்டையின் பகுதி 1 பூர்த்தி செய்யப்பட வேண்டும்.



6. இந்த அட்டையின் பகுதி 2 இனை மாவட்ட ஆணையாளர் விருது பயிற்சியின் பின்னர் பூர்த்தி செய்ய வேண்டும்.

7. மேலதிக விபரங்களை நேரடியாக மாவட்ட ஆணையாளரிடம் கலந்துரையாட முடியும்.

8. சாரணர் முன்னேற்ற அட்டையை சாரணர் தேர்வுகளுக்கு சாரணர் ஒருவர் பயன்படுத்த முடியும். இந்த அட்டையானது, சான்றிதழ் ஒன்றுக்கு சமமாகும். அத்தோடு, சாரணனுடைய வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டிய அட்டை இதுவாகும்.

## சாரணர் சின்னம் சூட்டும் வைபவம்

★ சாரணர் சின்னம் சூட்டும் வைபவத்தின் போது, ஆகக் கூடியதாக 5 சாரணர்களுக்கு மட்டுமே சின்னம் சூட்டப்பட வேண்டும்.



★ சின்னத்துக்குரிய சாரணனின் சாரண ஆசிரியரால் மட்டுமே சின்னம் சூட்டப்பட வேண்டும்.



★ சாரணனின் குடும்ப அங்கத்தவர் முன்னிலையிலும் கொடிக் கம்பத்திற்கு முன்னால் 'U' வடிவில் சாரணர்கள் நின்ற நிலையிலும் சின்னம் அணிவிக்கப்பட வேண்டும்.

★ இந்த நிகழ்வானது, சாரணனுடைய வாழ்நாளில் என்றும் நினைவில் இருக்கும் வண்ணம் இயற்கையான சூழல் நிலையில் நடாத்துவது சிறப்பானதாகும்.

## பாத்திரம் இன்றிய சமையல்

சாரணர்கள் கடுமையான பிரயாணங்களை மேற்கொள்ளும்போது, பாத்திரங்களின்றியும் சமைக்க கற்றிருக்க வேண்டும். அவ்வாறு பாத்திரங்களின்றி சமைக்கக் கூடிய சமையல்

**தேவையான பொருட்கள்:**

★ முட்டை 1
★ கிழங்கு 2
★ கூர்மையான குச்சிகள் 2
★ ஈரமான கடதாசி
★ சிறிதளவு களிமண்
★ தேவையான அளவு உப்பு, மிளகுத் தூள்





**செய்முறை:**

★ நன்கு சுத்தம் செய்த உருளைக் கிழங்கை படத்தில் காட்டியவாறு பாத்திரம் வடிவில் நன்றாகக் குடைந்து வைத்துக்கொள்ளவும்.

★ குடைந்துள்ள கிழங்கினுள் முட்டையை உடைத்து ஊற்ற வேண்டும். அதனுள் தேவைக்கேற்ற உப்பு, மிளகுத்தூள் சேர்த்து கொள்ளவும்.

★ சிறிய கிழங்குத் துண்டை வெட்டி கூர்மையான குச்சிகளைக் குத்தி, அதனை முட்டையுள்ள கிழங்கிற்கு மூடியாக வைக்கவும்.

★ கிழங்கினுள் இருக்கும் முட்டை வெளியில் ஊறாத வகையில் ஈரமான கடதாசியை சுற்ற வேண்டும். அத்தோடு, இதன்மேல் சிறிய படையாக களிமண்ணையும் பூசிக் கொள்ளவும்.

★ சாரணர்கள் குளிர்காய உருவாக்கும் நெருப்பினுள் கிழங்கை வைக்க வேண்டும்.

★ சிறிது நேரத்தில் கிழங்குடன் முட்டை வாசனை வந்த பின்னர் ஒரு தடியின் உதவியுடன் கிழங்கை வெளியே எடுக்க வேண்டும்.

noolaham.org | aavanaham.org

விஜய் PLUS

# நல்ல பழக்கங்கள்




கதவைத் தட்டி அனுமதி பெறுதல்

பிறர் கதைத்துக் கொண்டிருக்கும் போது ஏதும் கேட்க வேண்டும் என்றால் முதலில் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்








அன்பாக இருங்கள், அக்கறை காட்டுங்கள், மரியாதை செய்யுங்கள்





பிறரை சந்திக்கும்போது அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள், வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள்

# உடலில் புள்ளிகள் கொண்ட பிராணிகள்



**இங்குள்ள செவ்வக வடிவங்களை இனங்கண்டு அவற்றுக்கு வெவ்வேறு நிறங்களைத் தீட்டுங்கள்**



-நுஸ்ஜ்

Digitized by Noolaham Foundation.

1. படத்தில் நான்கு கால்களைக் கொண்ட உயிரினம் ஒன்று காணப்படுகின்றது. அது எது?

..............................................................................

2. இங்குள்ள சிறுவர்கள் என்னென்ன செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக் கின்றனர்?

..............................................................................




3. சிவப்பு நிற சட்டையும் பச்சை நிற பாதணியும் அணிந்துள்ள சிறுமியின் கையில் இருப்பது என்ன?

..............................................................................

4. இங்குள்ளவர்களில் அதிகமானோர் என்ன நிறத்திலான ஆடைகளை அணிந்துள்ளனர்?

..............................................................................

கீழே வழங்கப்பட்டுள்ள சொற்களை உரிய பொருட்களைக் குறித்துக் காட்டும் கட்டத்தினுள் எழுதுங்கள்.







1. ............................ வயிற்றுப் பகுதியில் பையொன்று உள்ளது. (கரடி, கங்காரு)

2. கடலில் வாழும் மிகப் பெரிய உயிரினம் ............................ (திமிங்கிலம், யானை)

3. நீண்ட கழுத்தை உடைய விலங்கு ............................ (வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி)

4. வேகமாக ஓடும் பறவை ................ (காட்டுக்கோழி, தீக்கோழி)

5. ............................ ஊர்ந்து செல்லும். (முயல், பாம்பு)

6. எந்த நேரமும் தூங்கும் விலங்கு ................ (ஸ்லொத், நாய்)






1. இந்தக் கூடை;

1. பலகையினால் செய்யப்பட்டது
2. பிளாஸ்டிக்கினால் ஆனது
3. பிரம்பினால் பின்னப்பட்டது

2. கூடையில் காணப்படுபவை யாவை?

1. பழங்கள் 2. மரக்கறிகள்
3. பழங்களும் மரக்கறிகளும்


3. புதிய மரக்கறிகள், பழங்கள் சாப்பிடுவது ..............................................................

1. உடல் ஆரோக்கியத்திற்கு உதவும்
2. மரக்கறிகளின் சிறப்பான வளர்ச்சிக்கு உதவும்
3. மரக்கறிகள், பழங்கள் அழுகிவிடாமல் இருக்கும்

- ஜீநு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வழங்கப்பட்டுள்ள சொற்களை உரிய கட்டங்களில் நிரப்பி குறுக்கெழுத்துப் போட்டியைப் பூர்த்தி செய்க




- OCTOPUS
- DOLPHIN
- STARFISH
- TURTLE
- SHARK
- CRAB
- WHALE
- SEASHELL

## குறுக்கெழுத்துப் போட்டி: 219




### மேலிருந்து கீழ்

01. நிலக்கரி, தங்கம் அகழ்ந்தெடுக்கப்படும் இடம்.
02. வறுமை.
03. இராமாயண கதாபாத்திரமொன்று.
04. துன்பம். (குழம்பியுள்ளது)
06. கஞ்சன்.
07. குடிப்பது ........ கொப்பளிப்பது பன்னீர்.

### இடமிருந்து வலம்

01. தன்னைப்பற்றி மட்டும் நினைப்பவன்.
04. தாமரை. (குழம்பியுள்ளது)
05. இருள். (குழம்பியுள்ளது)
06. இது இருந்தால்தான் உலக்கை பயனளிக்கும். (குழம்பியுள்ளது)
07. மயில் அகவும் என்பதுபோல; குயில் ........ (குழம்பியுள்ளது)
08. கழுத்தின் பின்பகுதி. (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 218 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | ன் | டி | ய | த் | |
| த | | | ன் | | 2 எ |
| 3 யா | னை | | 4 பை | 5 பி | ன் |
| த் | 6 பா | 7 தி | | றை | |
| தி | | 8 வ | சை | | 9 ஆ |
| ரை | | லை | 10 இ | | ளி |







படங்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் இணைக்க




- சாவி
- அரசன்
- கேத்தல்
- கத்தி
- பட்டம்
- கங்காரு



நிழற்றப்பட்டுள்ள பகுதியைக் குறிக்கும் பின்னத்தில் வட்டமிடுக

1.  $\frac{2}{5}$ $\frac{2}{4}$ $\frac{1}{4}$
2.  $\frac{2}{3}$ $\frac{1}{4}$ $\frac{3}{4}$
3.  $\frac{2}{4}$ $\frac{5}{6}$ $\frac{5}{8}$
4.  $\frac{1}{3}$ $\frac{1}{2}$ $\frac{2}{4}$

ஆங்கிலச் சொற்களை எழுதுக






★ தேவை, தேன், தேறு, தேடி, பால், பாவை, பாடி, பாகன், நடி, நகல், கன்று, கல், கடி

## அறிவுக்கு விருந்து (07.12.2016) விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| O | C | L | C | O | R | N |
| H | O | L | R | I | X | O |
| L | W | I | B | A | R | C |
| T | K | R | G | D | H | A |
| A | Y | P | H | G | A | B |
| C | A | T | E | E | C | P |
| C | H | U | C | K | O | U |
| R | I | C | R | A | B | C |








Digitized by Noolaham Foundation.



மடுல்சீமை-பது/பட்டாவத்தை தமிழ் வித்தியாலயம் ஏற்பாடு செய்து நடாத்திய கலை விழாவும் 'கூட்டாஞ்சோறு' சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியீடும் அண்மையில் வித்தியாலய அதிபர் த.புனிதராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 'கூட்டாஞ்சோறு' சஞ்சிகையின் திறனாய்வுரையும் கல்வி, கலை, கலாசார, விளையாட்டுத் துறைகளில் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. மேலும் பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

(தகவல்:- பூவரசன்)

**விஜய் விழா உலா**
**த.பெ. எண் 2037**
**கொழும்பு**




இ.டனுஜன், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா.





அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.இல 2037
கொழும்பு




மா.நஷாத் அகமட், கின்னியா மத்திய கல்லூரி, கின்னியா.















மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் ஹுஸைனியா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று அண்மையில் வித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எம்.எம்.பாயிஸ் (இஸ்லாஹி) தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளையே இங்கு காண்கிறீர்கள்.

(தகவல்: பழுலுல்லாஹ் பர்ஹான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பெயர்: ஹனபி அக்மல்.
புள்ளிகள்: 170.
பாடசாலை: ஸஹிரா தேசிய பாடசாலை, மாத்தளை.



பெயர்: பிரதீப்ராஜ் கபிசன்.
புள்ளிகள்: 176.
பாடசாலை: மட்/ கோட்டமுனை கனிஷ்ட வித்தி., மட்டக்களப்பு.



பெயர்: எஃப்.பாதீன்.
புள்ளிகள்: 155.
பாடசாலை: க/பதியுத்தீன் மஹ்மூத் பெண்கள் பாடசாலை, கண்டி.
பெற்றோர்: எம்.பாயிஸ்- சம்சுன் நிஸா.



பெயர்: லி.லக்ஷிஹன்.
புள்ளிகள்: 173.
பாடசாலை: யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.



பெயர்: சித்தி சஹ்லா.
புள்ளிகள்: 170.
பாடசாலை: கொ/ கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-09.
பெற்றோர்: எம்.சலீம்- சித்தி ஸீனியா.



பெயர்: எஃப்.நதா.
புள்ளிகள்: 174.
பாடசாலை: தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம், தில்லையடி.
பெற்றோர்: முகுஷீன்- ரிபியானா.



பெயர்: எஸ்.தீபான்ஜனா.
புள்ளிகள்: 166.
பாடசாலை: புனித கெப்ரியல் மகளிர் கல்லூரி, ஹட்டன்.
பெற்றோர்: சுந்தர்ராஜ்- சிவக்குமாரி.



பெயர்: எஃப்.ஹுமைத்.
புள்ளிகள்: 154.
பாடசாலை: அந்-நூர் ஆரம்ப பாடசாலை, ஹந்தெஸ்ஸ.
பெற்றோர்: பாரூக்- ரினோசா.

## மாறை/கொடபிட்டிய ஸாதாத் மகா வித்தியாலயம், கொடபிட்டிய



பெயர்: ஸப்வத் அஹ்மத்.
புள்ளிகள்: 161.



பெயர்: ஏ.அப்துல் அனீப்.
புள்ளிகள்: 158.



பெயர்: அமீமா கரீம்.
புள்ளிகள்: 160.



பெயர்: கதீஜா பெறோஸ்.
புள்ளிகள்: 166.


உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலாவுக்கும் மரக்கறி வியாபாரிக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

වෙළෙන්දා: එන්න නෝනා. හොඳ එළවළු තියෙනවා. මොනවාද ඕනේ?
என்ன நோனா. ஹொந்த எளவளு தியெனவா. மொனவாத ஓனே?
வியாபாரி: **வாங்க அம்மா. நல்ல மரக்கறி இருக்கிறது. என்ன வேண்டும்?**

කමලා: වම්බටු කීයද?
வம்படு கீயத?
கமலா: **கத்தரிக்காய் என்ன விலை?**

වෙළෙන්දා: කිලෝ 1ක් රුපියල් අසූවයි (80යි).
கிலோ 1க் (எகக்) ருப்பியல் அசூவய்.
வியாபாரி: **ஒரு கிலோ 80 ரூபாய்.**

කමලා: මිල වැඩියිනේ.
மில வெடிய்னே.
கமலா: **விலை அதிகமே.**

වෙළෙන්දා: නැහැ නෝනා. මේ ගමේ වම්බටු.
நெஹெ நோனா. மே கமே வம்படு.
வியாபாரி: **இல்லை அம்மா. இது நாட்டுக் கத்தரிக்காய்.**

කමලා: මට කිලෝ එකක් දෙන්න. මුරුංගා කීයද?
மட்ட கிலோ எகக் தென்ன. முருங்கா கீயத?
கமலா: **எனக்கு ஒரு கிலோ தாருங்கள். முருங்கை என்ன விலை?**

වෙළෙන්දා: මුරුංගා කිලෝ එක රුපියල් 60යි (හැටයි).
முருங்கா கிலோ எக ருப்பியல் 60ய் (ஹெட்டய்).
வியாபாரி: **முருங்கை ஒரு கிலோ 60 ரூபாய்.**

කමලා: මට මුරුංගා ග්‍රෑම් 500ක් (පන්සියයක්) දෙන්න.
மட்ட முருங்கா கிராம் 500 (பன்சீயக்) தென்ன.
கமலா: **எனக்கு 500 கிராம் முருங்கை தாருங்கள்.**

වෙළෙන්දා: වෙන මොනවද ඕනේ නෝනා? මේ කරවිල තියෙනවා.
வென மொனவத ஓனே நோனா? மே கரவில தியெனவா.
வியாபாரி: **வேறு என்ன வேண்டும் அம்மா? இதோ பாகற்காய் இருக்கிறது.**

කමලා: මට කරවිල ග්‍රෑම් 250යි (දෙසිය පනහයි) තක්කාලි ග්‍රෑම් 250යි (දෙසිය පනහයි) දෙන්න.
மட்ட கரவில கிரேம் தெசிய பனஹய், தக்காளி கிரேம் தெசிய பனஹய் தென்ன.
கமலா: **எனக்கு பாகற்காய் 250 கிராமும் தக்காளி 250 கிராமும் தாருங்கள்.**

වෙළෙන්දා: වෙන මොනවද ඕනේ නෝනා?
வென மொனவத ஓனே நோனா?
வியாபாரி: **வேறு என்ன வேண்டும் அம்மா?**

කමලා: එච්චරයි. මිල ටිකක් අඩු කරල දෙන්න.
எச்சரய்.
மில டிகக் அடுகரலா தென்ன.
கமலா: **அவ்வளவுதான். விலையைக் கொஞ்சம் குறைத்துத் தாருங்கள்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. நல்ல மரக்கறி இருக்கிறது.
   ..........................................
2. முருங்கை என்ன விலை?
   ..........................................
3. பாகற்காய் இருக்கிறது.
   ..........................................




## 'was' எனும் இறந்தகால துணை வினைச்சொல்
## The past tense Auxiliary Verb 'was'

**குறிப்பு: 'Am' எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லின் இறந்தகால வடிவமே 'was' என்பதாகும். இவற்றை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.**

அ) I am in the class now.
நான் இப்பொழுது வகுப்பில் இருக்கிறேன்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஆ) I was in the class yesterday.
நான் நேற்று வகுப்பில் இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ **மேற்காணும் வாக்கியங்களின்படி;**

| | |
|---|---|
| அ) I am.<br>நான் இருக்கிறேன்.(நிகழ்காலம்) | ஆ) I was.<br>நான் இருந்தேன். (இறந்தகாலம்) |

இ) I am in school now.
நான் இப்பொழுது பாடசாலையில் இருக்கின்றேன்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஈ) I was in school yesterday.
நான் நேற்று பாடசாலையில் இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

உ) I am at home now.
நான் இப்பொழுது வீட்டில் இருக்கிறேன்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஊ) I was at home yesterday.
நான் நேற்று வீட்டில் இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

எ) I am a manager in this company.
நான் இந்தக் கம்பனியில் ஒரு முகாமையாளராக இருக்கிறேன்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஏ) I was a clerk in that firm.
நான் அந்த நிறுவனத்தில் ஒரு இலிகிதராக இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஐ) I am a teacher now.
நான் இப்போது ஓர் ஆசிரியராக இருக்கிறேன்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஒ) I was a student then.
நான் அப்போது ஒரு மாணவனாக இருந்தேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொவெங்ஹோ நாகரிகத்திற்கு செல்வோம்



ஹொரவெங்ஹோ (Huang-He) நாகரிகமானது, சீனாவின் மிகத் தொன்மையான நாகரிகம் என கருதப்படுகின்றது. அக்காலகட்டத்தில் சீன விவசாயிகள் சிலர் பயிர்ச்செய்கைக்காக நிலத்தை தயார்செய்துகொண்டிருந்தபோது, எலும்புத் துண்டுகள் சிலவற்றைக் கண்டெடுத்தனர். அதில் சீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். அதனை வாசித்த பின்னரே, சீனாவின் பழமையான நாகரிகம் குறித்த தகவல்கள் வெளியாகின. இதோ, அந்த நாகரிகம் பற்றிய விபரங்கள்.

## நாகரிகத்தின் தோற்றம்

ஹொவெங்ஹோ நாகரிகத்தின் தாயகம் ஹொவெங்றோ நதிப் பள்ளத்தாக்காகும். மஞ்சள் நதியென்றும் அழைக் கப்படும் இந்த நதியின் நீர் மட்டம் அதிகரிப்பதால் ஏற்படும் அழிவுகள் காரணமாக, 'சீனாவின் துயரம்' என்ற அர்த்தத்தில் இது 'ஹொவெங்ஹோ' என அழைக்கப்பட்டது. இருப்பினும் பின்னர் இந்த வளமான பள்ளத்தாக்கில் மக்கள் பெருமளவில் குடியேறி நெற் பயிர்ச்செய்கையை ஆரம்பித்ததோடு, படிப்படியாக ஹொவங்ஹோ நாகரிகமும் கட்டி எழுப்பப்பட்டது.

## முதன் மன்னன்



இங்கு முதலாவதாக பலமானதொரு இராச்சியத்தை கட்டி எழுப்பியது ஷென் (Sage hingi) அரச வம்சத்தி னராவார். இவர்களின் தலைநகரம் 'அன்யான்' ஆகும்.

## சமயம்




இறந்த மூதாதையரை வணங்குவதே, இவர்களின் வழிபாட்டு முறை ஆகும். அத்தோடு, விலங்குகளின் எலும்புகள் மூலம் எதிர்காலத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் இங்குள்ள சமய குருமார்களிடம் இருந்தது. மறு பிறப்புக் குறித்த நம்பிக்கைகளும் இந்நாகரிக மக்களிடம் காணப்பட்டது.

## தொழில்நுட்பம்



வெடி மருந்துகளை கண்டுபிடித்தது, உலகிற்கு அச்சுக் கலையை அறிமுகப்படுத்தியது, நெசவு நூற்றல், மட்பாண்ட பொருட்கள், உலோக உபகரணங்கள், விவசாய மற்றும் போர்க்கருவிகளை தயாரித்தமை, காகிதம், கடிகாரம், பெரசூட் என்பன சீனர்களின் முக்கிய கண்டுபிடிப்பாகும். அத்தோடு, திசையறிகருவி, ஒரு வருடத்தின் நாட்களின் தொகையை கணித்து உலகிற்கு தெரிவித்தவர்களும் மற்றும் முதன் முதலாக நாணயப் பயன்பாட்டை அறிமுகம் செய்தவர்களும் சீனர்களே.

## வாழ்வாதாரம்



ஹொவெங்ஹோ நதிப் பள்ளத்தாக்கு மக்களின் பிரதான வாழ்வாதாரம் விவசாயமாகும். அத்துடன், முக்கிய பயிர்ச்செய்கைகளான பார்ளி, சோளம், கோதுமை ஆகிய தானியங்களும் பல்வேறு காய்கறி வகைகளும் பயிர்செய்யப்பட்டன.

## உணவு



தானிய வகைகள் பிரதான உணவாகும். இறைச்சி, மீன், பால், வெண்ணெய், காய்கறிகள் மற்றும் பழ வகைகள் அவர்களின் உணவுகளில் முக்கிய இடம் வகித்தன.


## கலைப்படைப்புகள்

அழகான, நுண்ணிய வேலைப்பாடுகள் மிகுந்த மட்பாண்டங்கள் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலோகங்களிலும் மரங்களிலும் அழகிய கைவினைப் பொருட்கள் செய்தனர். மரத்தால் செய்த குதிரை வண்டியானது,



அவர்களின் உயர் கலைப்படைப்புகளுக்கு சிறந்த உதாரணமாகும். கற்கள், எலும்புத் துண்டுகள், சிப்பிகள், மிருகங்களின் கொம்பு ஆகியவற்றில் அணிகலன் பொருட்கள் உருவாக்குவது மட்டுமன்றி, மயானங்களில் பல்வேறு செதுக்கல் கலையுடன் கூடிய மகர உருவங்களையும் விலங்குகளின் உருவங்களையும் உருவாக்கி வைத்திருந்தனர்.

## கட்டடக் கலை



சாதாரண பொது மக்கள் நிலத்தைத் தோண்டி நிலத் தின்கீழ் சதுர, வட்ட வடிவங்களில் வீடுகளை அமைத்து வீட்டு வாசல்களை வட்ட வடிவில் அமைத் தனர். அதேவேளை, உயர் குடிகளின் வீடுகள் களிமண் மேடை அமைத்து அதன்மீது மரப்பலகை யால் அவை அமைக்கப்பட்டன. பெரும்பாலும் வீட்டுப் பாவனை பொருட்கள் செம்பு, வெண்கலம், ஈயம், தங்கம் போன்ற உலோகங்களில் தயாரித்தனர்.

## மிருக வளர்ப்பு



இங்கு மிருக வளர்ப்பும் நடைபெற்றது. முதன் முதலாக கோழிகளை வீட்டில் வளர்த்தவர்கள் ஹொவெங்ஹோ வாசிகள் என கருதப்படுகின்றது.

## ஆடை அணிகள்



பட்டுப் புழுக்களை வளர்த்து அதன்மூலம் பெறப்படும் பட்டு நூலால் உருவாக்கப்பட்ட பட்டுத் துணியால் தமக்குரிய ஆடைகளை தயாரித்தனர்.

## எழுத்து முறை

ஆரம்பகாலத்தில் சித்திரங்களாக வரைந்து தமது கருத் துக்களை வெளியிட்டனர். பின்னர் தமக்கென ஓர் எழுத்து நடையை உருவாக்கினர். அந்த எழுத்துக்கள் மேலிருந்து கீழாக வாசிக்க வேண்டும். ஆரம்பகாலத்தில் எலும்புகளிலும் ஆமை ஓடுகளிலும், பலகைகளிலும் எழுதினர். பின்னர் களிமண் பாத்திரம், உலோகங்கள், கற்கள், பட்டுத்துணி ஆகியவற்றில் ஆவணக்குறிப்புகளை எழுதினர்.



-(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி செய்... விற்பனை...



புராதன சந்தையொன்றின் தோற்றம்

**ம**னிதன் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே விலங்குகளை வேட்டையாடுவதற்கு தேவையான அம்பையும் வில்லையும் தயாரித்ததோடு, சமைப்பதற்கு தேவையான மட்பாண்டங்களையும் உருவாக்கினான். மேலும், உடலில் அணிவதற்கு ஆடைகளை தயாரித்ததோடு, உண்பதற்குத் தேவையான உணவு வகைகளையும் விவசாயம் செய்து பெற்றுக்கொண்டான். விலங்கின் மாமிசங்களையும் உணவுக்காகப் பயன்படுத்திக்கொண்டான். நூலிழையைப் பயன்படுத்தி கயிறு திரிக்கவும், மரங்களை பயன்படுத்தி பல்வேறு உபகரணங்களை உற்பத்தி செய்யவும், உலோகங்களை பயன்படுத்தி பல்வேறு ஆயுதங்களை தயாரிக்கவும் கற்றுக்கொண்டான். தமது சுய தேவைகளுக்கு மேலதிகமாக உற்பத்தி செய்தவைகளை மற்றவர்களின் தேவைகளுக்காக பண்டமாற்று முறையை தனது முதற்காரியமாகச் செய்தான்.

அதன்பின் ஏதாவது ஒரு பொருளுக்கோ அல்லது ஏதாவதொரு சேவைக்கோ விலை நிர்ணயிக்கப்பட்டது. பண்டமாற்றுக்குப் பதிலாக விலை கொடுத்து அப்பொருளையோ, சேவையையோ பெறக்கூடிய நிலை உருவாகியது. அதற்கான பணம் ஆட்சியாளர்களால் வெளியிடப்பட்டது.

விற்பனை செய்தல் அல்லது வர்த்தகம் குறித்த எண்ணக்கருவானது, இச்செயற்பாட்டின் வழியாகத்தான் சமூகத்தில் ஏற்பட்டது. ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள மூலப் பொருட்களை பயன்படுத்தி பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என்றும், அவற்றை மற்றவர்களுக்கு விற்க முடியும் என்றும் உற்பத்தியாளர்கள் புரிந்து கொண்டனர். அதனால்தான் பொருட்களை விற்கவும் சேவைகளை விற்கவும் பல்வேறு வழிமுறைகளை கையாள வேண்டிய தேவை ஏற்பட்டது.



விரும்பியதை தெரிவு செய்தபடி...

பெருமளவு உற்பத்தி செய்யும் பொழுது அவற்றின் விலையை குறைக்கலாம் என்பதனையும் அவற்றை விலை கொடுத்து வாங்கும் கொள்வனவாளர்களுக்கு வாங்கும் ஆற்றல் அதிகரிக்கும் என்பதனையும் உற்பத்தியாளர்கள் அறிந்து கொண்டனர். இதன்படியே வர்த்தக சந்தைகள் உருவாகின.


## விற்பனையின் நான்கு பக்கங்கள்

விற்பனையில் அடிப்படையான நான்கு பக்கங்கள் செயற்படுவதை நாம் அவதானிக்கலாம். அவற்றை 4Ps என அழைப்பர்.



தேவையான இடத்திற்கு கொண்டு செல்லல்

P - Product - உற்பத்தி
P - Place - இடம்
P - Price - விலை
P - Promotion - உயர்வு/ விருத்தி



## உற்பத்தி

உற்பத்தி என்பதன் அர்த்தமானது, உற்பத்தியாளரால் கொள்வனவாளருக்கு அல்லது நுகர்வோருக்கு எத்தகையதை முன் வைப்பது என்பதாகும். இதன் அடிப்படையானது, அது கொள்வனவாளரின் தேவைக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். அத்தோடு, தமது உற்பத்திப் பொருள் நுகர்வோரின் தேவைகளுக்கு பொருத்தமானதாக அமைகின்றதா என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

## இடம்

இடம் என்பதன் அர்த்தம் ஏதோவொரு பொருளோ, சேவையோ கொள்வனவாளருக்கு அருகாமையான ஓர் இடத்தில் அமையச் செய்வதற்கு உற்பத்தியாளருக்கு ஆற்றல் இருக்க வேண்டும். உதாரணமாக, கடற்கரையில் உற்பத்தியாகும் உப்பை நாட்டின் மத்திய பகுதியில் வாழும் நுகர்வோருக்கு கொண்டு சென்று கொடுக்க வேண்டும். ஒரு சில நாடுகளில் மட்டும் விளையும் தேயிலையை விளையாத வெளிநாடுகளில் வாழும் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். இவ்விதமாக ஏதாவதொரு பொருள் அல்லது சேவையானது, விற்பனை இடத்துடன் போக்குவரத்தூடாக தொடர்பு படுகின்றது.




## விலை


பொருள் அல்லது சேவைக்கு நிர்ணயிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதை எவ்வாறு செய்வது?

மக்களால் நிரம்பி வழியும் வாராந்த சந்தை






விலையையே இங்கு விலை எனக் குறிப்பிடுகின்றனர். வர்த்தக சந்தையின் சுதந்திரப் போக்கின் காரணமாக, கேள்வி மற்றும் வழங்குதல் இரண்டிற்கும் இடையிலான செயல்பாட்டின் அடிப்படையிலேயே விலை நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது, ஒரு பொருளுக்கு கேள்வி அதிகமாகி அதேவேளை அப்பொருளை வழங்குதல் (விநியோகித்தல்)



குறைவடைந்தால் விலை உயரும். ஒரு பொருளுக்கு கேள்வி குறைந்து அப்பொருளை விநியோகிப்பது அதிகரித்தால் அப்பொருளின் விலை குறைவடையும். இந்த சித்தாந்தங்களுக்கு அப்பாலும் உற்பத்தியாளருக்கு விலையை நிர்ணயிக்கும் சில காரணிகளும் உள்ளன. எனினும், அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு நுகர்வோர் வாங்குவதற்கு விரும்பாவிட்டால் அதனை விற்பனை செய்ய முடியாமல் போய் விடும்.

அதேபோல், சில பொருட்களின் விநியோகம் அதிகரித்தால் கொள்வனவாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்க மாட்டார்கள். அடிப்படையில் ஏதாவதொரு பொருளின் அல்லது சேவையின் விலை அதோடு இணையும் உற்பத்திக் காரணிகளின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது.




## உயர்வு/விருத்தி

ஒரு பொருளையோ, சேவையையோ விலை கொடுத்து வாங்கவும் நுகரவும் மக்களை ஈடுபடுத்துவது அல்லது தூண்டுவதே உயர்வு அல்லது விருத்தி என்பதன் அர்த்தமாகும். அதற்காக அடிப்படையில் முதன்முதலாக விளம்பரப்படுத்தலை பயன்படுத்துகின்றனர். பிரச்சாரம் என்பதன் கருத்தும் விளம்பரப்படுத்தல் என்பதனையே குறிக்கும். ஆதிகாலத்தில் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை வண்டிகளிலும் தோள்களிலும் சுமந்து பாதை வழியாக நடந்து சென்று வீடுகளில் உள்ளோருக்கு கேட்கும் விதத்தில் கூவியபடியே விற்றனர். அதேபோல, சந்தைக்கு வரும் நுகர்வோரின் அவதானத்தை ஈர்க்கும் பொருட்டாக சத்தமாக கூவிக் கூவி விற்றனர். இன்றோ இதற்கு மாற்றீடாக விளம்பரம் செய்தல் என அது பரிணமித்துவிட்டது. விளம்பரத்திற்காக பெருமளவு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டிகளையேடுகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

## விற்பனையின்போது கட்டுப்படுத்தக் கூடியதும் கட்டுப்படுத்த முடியாததுமான விடயங்கள்

உற்பத்தி, இடம், விலை மற்றும் விருத்தி என்பன கட்டுப்படுத்தக்கூடிய விடயங்களாக உள்ளன. அதற்கு காரணம் ஏதாவதொரு உற்பத்தி நிறுவனத்திற்கு முன்குறித்த நான்கு விடயங்களையும் தனது விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள முடியும் என்பதாகும். எனினும், விற்பனையில் தாக்கத்தை செலுத்தும் அனைத்து விடயங்களையும் ஒரு உற்பத்தி நிறுவனத்தால் தனது விருப்பத்திற்கேற்ப கட்டுப்படுத்த முடியாது.

## கட்டுப்படுத்த முடியாத விடயங்கள்

- ★ கலாசார மற்றும் சமூகச் சூழல்
- ★ நிறுவனத்தின் வளங்கள் மற்றும் நோக்கம்
- ★ போட்டிச் சூழ்நிலை
- ★ பொருளியல் மற்றும் தொழில்நுட்பவியல் சூழல்
- ★ அரசியல் மற்றும் பிராந்தியச் சூழல்

ஒரு நாட்டினது பொருளாதாரம் வளர்ச்சி அடைவதென்பது அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களோ சேவையோ அல்லது விற்பனையோ வெற்றி அடைந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். விற்பனையின் இலக்காக நுகர்வோரே திகழ்வதால், நுகர்வோர் எந்த இடத்தில் இருக்கின்றனர் என்பதை அடையாளமிட்டு கூற முடியாதுள்ளது. எனவே, விற்பனையானது, நேர்த்தியாக வெற்றிகரமாக கையாளப்பட்டால் மட்டுமே உலகம் முழுவதும் வாழும் நுகர்வோரிடம் பொருட்களையும் சேவைகளையும் கூடியளவில் விற்பனை செய்ய முடியும் என்பதே உண்மையாகும். (-அ)



பண்டமாற்று முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரக் கிரகமொன்று கண்டுபிடிப்பு



அண்டவெளியில் வைரம் போல் ஜொலிக்கும் புதிய கிரகம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு '55 கெங்கிரி ஈ' என பெயர் சூட்டியுள்ளனர். இக்கிரகத்தின் மேற்பரப்பானது, பெறுமதிமிக்க இரத்தினங்களால் நிறைந்துள்ளது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதன் விட்டம் புவியைப் போன்று இரு மடங்காக இருப்பதோடு, அதன் நிறை புவியை விட எட்டு மடங்கு அதிகம் என குறிப்பிடப்பட்டுள் ளது. எமது புவியின் நிலக்கீழ் நீரானது, கிரனைட் பாறைப்படிவுகளால் மூடியிருப்பது போல இப்புதிய கிரகத்தின் மேற்பரப்பு வைரம் மற்றும் தங்கத்தால் மூடப்பட்டுள்ளது என நம்பப்படுகின்றது.

## கிரகத்தின் வரைபடம்

இக்கிரகத்தை உங்களால் தொலைநோக்கி மூலமாகக் காணமுடியும். சூரியன் போன்ற நட்சத்திரத்தை சுற்றிவரும் கிரகமொன்று அதிகளவான வைரத்தைக் கொண்டுள்ளதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்தமை இதுவே முதல் தடவையாகும். 'புவியை விட முற்றுமுழுதாக மாறுபட்ட வேறு ரசாயனக் கலவையை கொண்ட பாறைப்படிவுகளாலான கிரகமொன்றை எம்மால் காணக்கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவே' என இக்கிரக ஆய்வுக்குழுவின் தலைவரான நிக்கு மதுசு தெரிவித்துள்ளார்.

## கிரகத்தின் சூரியன்

இந்த வைரக் கிரகம் அதற்குரிய சூரியனின் சுற்றுப்பாதையில் ஒரு முறை சுற்றிவர 18 மணித்தியாலங்கள் எடுக்கின்றது. அத்தோடு, இந்த கிரகத்தின் வெப்பநிலையானது, 390° ஃபரன்ஹைட் கடுமையான வெப்பத்தைக் கொண்டுள்ளது. அதனால் இக்கிரகத்தில் உயிரினங்களால் வாழமுடியாது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மேலும் 4 கிரகங்கள்

கடந்த வருடம் இந்த வைரக் கிரகத்தோடு மேலும் நான்கு கிரகங்கள் 'ஏ 55 கெங்கரி' எனும் சூரியனை சுற்றிவருகின்றன என முதன் முதலாக அவதானிக்கப்பட்டது. இந்த கிரகம் குறித்த தகவல்களின்படி, இக்கிரகத்தில் எந்த வொரு இடத்திலும் நீர் இல்லை என்பதும் அது முக்கியமாக காபன், இரும்பு, சிலிகன் காபைட் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பதும் விஞ்ஞானிகளின் அனுமானமாக உள்ளது.




(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறட்டை எவ்வாறு உருவாகின்றது?

சிலர் உறங்கும்போது, சிலவிதமான சத்தங்களை வெளியிட்டுக்கொண்டே உறங்குவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இதனையே நாம் குறட்டை என்கின்றோம். இது உடல் ரீதியான சில பிரச்சினைகளாலேயே ஏற்படுவதாக மருத்துவத் துறை தெரிவிக்கின்றது. அந்த வகையில் குறட்டைக்கான காரணங்களும் அதனை தடுக்கும் வழிமுறைகளும் வருமாறு....

## குறட்டை எவ்வாறு உருவாகின்றது?

நாம் சுவாசிக்கும்போது, உள்ளெடுக்கும் காற்றானது மூக்கு, வாய், தொண்டை, மூச்சுக் குழாய் எனும் முறையில் நுரையீரலுக்குச் செல்கின்றது. நாம் உறங்கும்போது நாம் உள்ளெடுக்கும் காற்றானது, மேற்கூறப்பட்ட முறையில் எங்காவது ஓர் இடத்தில் தடைப்படும்போது தான் குறட்டை ஒலி உருவாகின்றது.

அத்தோடு, சிலவேளைகளில் சளியுடன் கூடிய மூக்கடைப்பு, ஒவ்வாமை, சைனஸ் தொல்லை, டொன்சிலிஸ் வளர்ச்சி (தொண்டை அலர்ச்சி), மூக்கு இடைச்சுவர் வளர்ச்சி வளைவு, தைராய்டு பிரச்சினை, உடல் பருமன், கழுத்தைச் சுற்றியுள்ள அதிகளவான கொழுப்பு போன்ற காரணங்களாலும் குறட்டை உருவாகின்றது.





## குறட்டையால் ஏற்படும் பாதிப்புகள்

ஒரு நபர் குறட்டை விடுவதால் அவர் மட்டுமன்றி அருகில் உறங்குபவருக்கும் சிரமங்கள் ஏற்படுகின்றன. குறட்டை விடும் நபர் காலையில் உறக்கம் விட்டு எழும்போது, கடுமையான தலைவலியை உணர்வார். ஏனைய நேரங்களில் புத்துணர்வின்றி செயற்பட நேரிடும். அதேவேளை, தன்னையறியாமலேயே தூங்கி விழவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். செய்யும் வேலைகளில் கவனக் குறைவு, ஞாபக மறதி, இதயத் துடிப்பில் பிரச்சினை, ரத்த அழுத்தம் அதிகரித்தல், நுரையீரல் பாதிப்பு, மூளையில் பாதிப்பு போன்ற பல பிரச்சினைகள் குறட்டையால் ஏற்படும்.



## குறட்டையை தடுக்கும் வழிமுறைகள்

நாம் உறங்கும்போது, தலைப்பகுதியை சற்று உயர்த்தி வைத்து உறங்க வேண்டும். மல்லாக்கப் படுத்து உறங்குவதை தவிர்த்தல் நலமானது. நாம் உறங்கும்போது, உடல் எடையை சீராக வைத்துக்கொண்டு ஒரு பக்கம் சரிந்து உறங்குவதால் குறட்டை உருவாகுவதை சில வேளைகளில் தடுக்க முடியும்.


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software




★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ்

போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*07.12.2016* 'தூவானம்' கேள்விக்கான விடை:
கல்பொத்த
**Pendrive** வெற்றியாளர்:
ந.குகவரதன்,
168, யோகபுரம் கிழக்கு,
யோகபுரம்.

**'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை**

Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(21.12.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
**21.12.2016**
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................

..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகர எல்லைக்குள் 48 பாடசாலைகளில் டெங்கு...



கொழும்பில் 120 பாடசாலைகளை பரிசோதித்ததில் 48 பாடசாலைகளில் டெங்கு நுளம்புகளின் கூட்டுப்புழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின்மூலம் அண்மையில் இவ் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இதன்போது, மேல் மாகாணம் முழுவதும் 12,056 இடங்களில் சோதனைகள் நடாத்தப்பட்டு அதில் 506 இடங்களில் நுளம்பு கூட்டுப்புழுக்கள் இருந்ததை கண்டறிந்ததோடு, இவற்றில் 1,565 இடங்களில் சுத்தப்படுத்தல் நடவடிக்கைகள் எடுத்ததோடு 316 இடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும், 867 இடங்களுக்கு உத்தரவு கடிதங்களை அனுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆழ் கடலிலும் புதைம எரிபொருள்

இற்றைக்கு ஏறக்குறைய 3 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் நிலப்பகுதியில் புதையுண்ட புதைமங்களான தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பனவற்றில் இருந்து உருவான எரிபொருளையே 'புதைம எரிபொருள்' என அழைக்கின்றனர். அவை கனிய எண்ணெய், இயற்கை வாயு, நிலக்கரி என வகைப்படும்.

இவ்வாறே, ஆழ்கடலிலும் எமது கண்களுக்குத் தெரியாத சிறிய உயிரினங்கள் என டெஸ்மிட, டயடம, அல்காக்கள் ஆகியன உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை சூரிய சக்தியை இரசாயன சக்தியாக மாற்றிக்கொண்டு



அதனையே உணவாக தனது உடலுக்குள் சேமித்து வைத்துக் கொள்கின்றன. இந்த உயிரினங்கள் உடலினுள் உணவினை எண்ணெய்யாகவே சேமித்து வைக்கின்றன.

இவ் உயிரினங்கள் இறந்த பின்னர் சமுத்திரத்தின் அடித்தளத்தில் தங்கிவிடுகின்றன. அதேவேளை, கடலலைகள், பெருங்காற்று போன்றவைகளால் அடித்து வரப்படும் சிறிய அளவிலான பாறைத் துண்டுகள் சமுத்திரத்தின் அடித்தளத்தில் தேங்குகின்றன. அந்த பாறைத் துண்டுகளுடன், இறந்துபோன உயிரினங்களின் உடலின் பகுதிகளும் ஆழ்கடலிலுள்ள சேறு மற்றும் மணலின் பகுதிகளும் கடலின் அடித்தளத்தில் நிரந்தரமாக தேங்கிவிடுகின்றது. இவ்வாறு தேங்கி இருக்கும் புதைமங்களிடையே உருவாகும் இறுக்கமான அசைவுகளால் கடலில் இறந்த அனைத்து உயிரினங்களின் புதைமங்களும் நிலத்தின் ஆழமான அடிப்பகுதிக்கு தள்ளப்படுகின்றன. இவை பூமியின் அடிப்பகுதியில் நிலவும் அதிக வெப்பத்திற்கும் கடுமையான அழுத்தத்திற்கும் இலக்காவதோடு, பல்வேறு பற்றீரியாக்களின் செயற்பாட்டிற்கு இலக்காகி பில்லியன் கணக்கான வருடங்களுக்கு பின்னர் கடலில் புதைம எரிபொருளாக உருவாகின்றன.

# கியூபா

கியூபாவின் ஆதிக்குடிகளாக அமெரிக்க இந்தியர்கள் வாழ்ந்தபோது, கி.பி. 1492 ஆம் ஆண்டில் கிறிஸ்டோபர் கொலம்பஸ் இந்நாட்டினை கண்டுபிடித்தார். அதன்பின்னர் இந்நாடு ஸ்பானியர் வசமாகியது. அதனை தொடர்ந்து 1898 ஆம் ஆண்டில் அமெரிக்க யுத்தத்தின் பின்னர் கியூபா அமெரிக்கா வசமாகியது. 1902 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெரிஸ் கூட்டணியின்படி, இந்நாடு அமெரிக்காவிடம் இருந்து சுதந்திரம் அடைந்தபோது, ஆட்சிபுரிந்த ஜனாதிபதியான படிஸ்டாவின் ஆட்சிக்கு எதிராக ஃபிதெல் கெஸ்ட்ரோவால் முன்னெடுக்கப்பட்ட புரட்சியின் பின்னர் இந்நாட்டில் பொதுவுடமை ஆட்சி நிலை நாட்டப்பட்டது.




noolaham.org | aavanaham.org

# உலகில் பிரபல்யமானவர்

## நஜாத் பெல்கசெம்




சிறு வயதில் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு பல இன்னல்களுக்கு மத்தியில் பிரான்ஸ் நாட்டின் முதல் பெண் கல்வி அமைச்சராக பதவியேற்றவர் தான் நஜாத் பெல்கசெம் ஆவார். இவர் 1977 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி வட ஆபிரிக்கா நாடான மொரோக்கோவில் ஒரு கட்டடத் தொழிலாளியின் மகளாகப் பிறந்தார்.

இவருடைய குடும்பம் கொடிய வறுமையில் வாடியதால் இவர் நான்கு வயதிலேயே பெற்றோரால் ஆடு மேய்க்கும் தொழிலுக்கு அனுப்பப்பட்டார். இருப்பினும் வட ஆபிரிக்காவில் தொடர்ந்து வாழ முடியாது எனத் தீர்மானித்த இவரின் பெற்றோர் பிரான்ஸ் நாட்டிற்கு குடிபெயர்ந்தனர். பிரான்ஸ் நாட்டை வந்தடைந்த நஜாத் பகுதிநேர வேலை ஒன்றை செய்து கொண்டே கல்வியைத் தொடர்ந்தார். தமது அயராத முயற்சியால், பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

2008 ஆம் ஆண்டளவில் லியோன் நகரத்தின் கவுன்சிலராக தன் அரசியல் வாழ்வை தொடங்கினார். அதன்பின்னர், 2009, 2011ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் செய்தி தொடர்பாளராகவும் செயற்பட்டார்.

2012 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை மகளிர் விவகார அமைச்சு, நகர நிர்வாக அமைச்சு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு ஆகிய மூன்று பதவிகளை திறம்பட வகித்தார். இவரின் ஆளுமையைக் கண்டு வியந்த பிரான்ஸ் அரசாங்கம் 2014 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் முதல் கல்வி அமைச்சுப் பொறுப்பையும் இவரிடமே வழங்கியது. அத்தோடு, 2014 ஆம் ஆண்டு பிரான்ஸ் அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதும் நஜாத் பெல்கசெம் கல்வி அமைச்சராகவே பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# உலகில் 1 ஆவது



கணனி



கையடக்க தொலைபேசி



எக்ஸ்-ரே

# தெரிந்து கொள்வோம்

★ அரபு வசந்தம் என்ற அரசியல் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள பிரதான அரபு நாடுகள் எவை?

லிபியா, எகிப்து, சிரியா



★ இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் யார்?

ஜோன் அமரதுங்க

★ மனிதனின் செங்குருதியணு ஒன்று மனிதனின் முழு உடலிலும் பயணிக்க எடுக்கும் நேரம் எவ்வளவு?



60 விநாடிகள்



★ அன்னை திரேசா எப்போது காலமானார்?

1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி

★ சதுரங்கம் (செஸ்)விளையாட்டில் காய்களை எப்பெயரால் அழைப்பர்?

1. மன்னன் -King
2. ராணி -Queen
3. அமைச்சர் -Bishop
4. யானைப் படை -Rook
5. குதிரைப் படை -Knight
6. வேலையாள் படை -Pawan



★ தாவரங்கள் தமக்கு வேண்டிய உணவை தயாரிக்கும் முறை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?



ஒளித் தொகுப்பு



★ உலகின் சர்க்கரைக் கிண்ணம் என்று அழைக்கப்படும் நாடு எது?

கியூபா

★ உலகில் வேகமாக ஓடும் ஆறு எது? அது எங்குள்ளது?



அமேசன் ஆறு, தென் அமெரிக்கா கண்டத்தில்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தும்மும்போதும் இருமும்போதும் கவனம் தேவை!



அண்மையில் அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி, ஒருவர் தும்மும்போது வெளியேறும் திரவத்துளிகள் எட்டு மீற்றர் தூரத்திற்கு பயணிக்கும் என்றும், இருமும்போது வெளியாகும் திரவத்துளிகள் ஆறு மீற்றர் தூரத்திற்கு பயணிக்கும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த திரவத்துளிகள் மூலம் வெளியேறும் நோய்க் கிருமிகள் சுமார் 10 நிமிடங்களுக்கு சூழலில் உயிர் வாழும் என்றும் தெரியவந்துள்ளது.

எனவே, தும்மும்போதும் இருமும்போதும் வாயையும் மூக்கையும் கைக்குட்டையினாலோ அல்லது டிஷு கொண்டோ மூடிக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கமானது, எமக்கு அருகிலிருப்பவர்களின் நலனில் நாம் அக்கறைகொள்வது போன்றே, நமது உடல் நலனைப் பேண உதவுவதாகவும் அமையும்.

# புள்ளி ஏரி



கனடாவின் பிரிடிஷ் கொலம்பியா மாகாணத்தின் கிழக்கு சிமில்கமீன் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள உப்புநீர் ஏரிதான் 'ஸ்பொட்டட் லேக்' (Spotted Lake)ஆகும். இதனை தமிழில் 'புள்ளி ஏரி' என்று குறிப்பிடுவர். இந்த ஏரியிலுள்ள நீரில் மெக்னீசியம் சல்ஃபேட், கல்சியம், சோடியம் சல்ஃபேட் போன்ற தாதுக்கள் பெருமளவில் அடங்கியுள்ளன. கோடைகாலத்தில் இந்த ஏரியிலிருந்து அதிகளவு நீர் ஆவியாதலுக்கு உட்படும். அதேவேளை, தாதுக்கள் நிலத்தில் தேங்கிவிடும். மீண்டும் மழைக் காலத்தில் ஏரியில் நீர் நிரம்பும்போது, தாதுக்களின் நிறத்திற்கமைய ஏரியில் பெரிய புள்ளிகள் இருப்பது போன்று காட்சியளிக்கும்.

# 80 கோடி பேர் பட்டினியில்.....!

ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு



ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அண்மையில் மேற்கொண்ட ஆய்வுக்கமைய, உலகில் 80 கோடி பேர் உண்பதற்கு போதுமான உணவின்றி பட்டினியால் வாடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. இதனால் இவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினாலும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே இந்த அவலநிலையைக் காணக்கூடியதாக உள்ளதென சுட்டிக்காட்டிள்ளது.



உலகில் ஒரு பகுதியினர் இவ்வாறு உணவின்றித் தவிக்கும் அதேவேளை, 190 கோடி பேர் அதிக உடல் பருமனால் அவதிப்படுகின்றனர். துரித உணவு உட்கொள்ளல், உணவுக் கட்டுப்பாடு இல்லாமை மற்றும் போதிய உடற்பயிற்சி இன்மை போன்ற காரணங்களாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# வித்தியாசமான வழக்கம்



நாம் நோய்வாய்ப்பட்டால் மருத்துவரை நாடி சிகிச்சை பெறுவோம். அங்கிருந்து வரும்போதே சிகிச்சைக்கான கட்டணங்களை செலுத்தியாக வேண்டும். சிலவேளைகளில் அந்த மருத்துவர் வழங்கிய மாத்திரைகளால் நோய் குணமடையாமல், வேறொரு மருத்துவரை நாடுவதுமுண்டு. ஆனால், பண்டைய சீனாவில் நோயாளி ஒருவர் மருத்துவரை நாடி சிகிச்சை பெற்றுக்கொண்டாலும், குறித்த நோயாளி குணமடைந்தால் மட்டுமே மருத்துவர்கள் சிகிச்சைக்கான கட்டணத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அதுவே நோயாளி இறந்துவிட்டால் மருத்துவர்தான் பணம் செலுத்த வேண்டுமாம்!

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, டிசம்பர் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 21, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org